# அழகியற் கல்வி
# நாடகமும் அரங்கியலும்

## புதிய பாடத்திட்டம்

## தரம் 10

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

# நாடகமும் அரங்கியலும்

## அறிமுகம்

அழகியற் கல்வியின் ஒரு துறையாக நாடகமும் அரங்கியலும் பற்றிய 10ஆம் தர கற்கை நெறிக்கான கைந்நூல் இது.

ஏறத்தாழ 26 வருடங்களாக க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கான பாடங்களில் ஒன்றாக இந்நாடகமும் அரங்கியலும் கற்கை நெறி தற்போது க.பொ.த சாதாரண தரத்திற்கும் ஒரு பாடமாகின்றது. 2000 ஆண்டு முதல் இது ஒரு பாடமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

அழகியற் கல்வி மாணவர்களிடையே கலைகள் பற்றிய உணர்வையும், ரசனையுணர்வையும் வளர்ப்பதற்கு வழிவகுப்பதாகும். மனிதர்களிடம் மனிதத் தன்மையை வளர்ப்பதற்கு அழகியற்கல்வி அத்தியாவசியமாகின்றது. ஷஷமானுடநோக்கு'' என்பது மாணவர்களிடையே வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கலைகள் பற்றிய அறிவும் கலைப் பயில்வும் இரசனையுணர்வையும், மானுட சிரத்தையையும் ஏற்படுத்தும், இந்த உணர்வுகள் செம்மையான முறையில் வளர்க்கப்படுமேயானால் மாணவர்கள் எதிர்காலத்தில் ஷசமநிலைப்பட்ட ஆளுமை''யை வளர்த்தெடுத்துக்கொள்வர்.

மனித முக்கியத்துவத்தை உணருவதற்கு நாடகம் ஒரு முக்கியமான பயில்துறையாகும். நாடகத்தில் ஒவ்வொரு பாத்திரங்களும் முக்கியமானவை. சிறியதெனினும், பெரியதெனினும் ஒவ்வொரு பாத்திரமும் முக்கியமானவையே. பிரதான பாத்திரம் என்பது சம்பந்தப்பட்ட பிரச்சினையில், விடயத்தில் அது பிரதானமாக இருக்கிறதே தவிர அது மாத்திரமே முக்கியமானதல்ல.

நாடகம் இன்னும் ஒரு உண்மையையும் நன்கு காட்டும் மனித இயக்கம் என்பது ஏதோ ஒரு வகையில் ஷஷமோதுகை''களோடு சம்பந்தப்பட்டது. அந்த மோதுகை சிலவேளைகளில் சிரிப்பை ஊட்டலாம். சிலவேளை கண்ணீரை வரவழைக்கலாம். ஆனால் எல்லா வேளைகளிலும் மனித வாழ்க்கையின் அடிநாதமான பிரச்சினைகள் பற்றியதாக இருக்கும். மோதுகை நாடகத்தின் சிறப்பு அம்சமாகும்.

நாடகம் ஷஷபார்க்கப்படுவது'' அது நம் கண்முன்னே விரிவது, நாடகத்தின் ஒவ்வொரு சொல்லும், செயல் நிகழ்வும் முக்கியமானவை. நாடகம் கட்புலனையும், செவிப்புலனையும் செவ்வைப்படுத்துகின்றது. வாழ்க்கையை புறநோக்காக நின்று பார்ப்பதற்கு உதவுகின்றது.

நாடகம் என்பது ஒரு துறையுடன் (நடிப்பு, இயக்கம், ஒப்பனை முதலானவை) நின்று விடுவதில்லை. அது பல துறைகளைக் கொண்டது. இதனால் பல்வேறு ஆர்வம் கொண்டவர்களை நாடகத்தில் ஒன்றிணைக்க முடிகிறது. நாடகம் ஷகூட்டுக்கலை' என்பதன் முக்கியத்துவம் இதுதன். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு திறமை இருக்கும். அத்திறமைகளை ஒன்று சேர்க்கும்போது மனித ஆற்றல் புதிய உத்வேகம் பெறுகிறது.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

நாடகம் பண்பாட்டினுள்ளிருந்து வருவது பண்பாட்டைக் கையளிக்க உதவுவது. அது பண்பாட்டின் சின்னம். அதே வேளையில் பண்பாட்டுக்கு ஓர் உயிர்ப்பையும் வழங்குகிறது. நாடகம் என்பது கூட்டுநிலையாகும்.

நாடகம் தொடர்பாடலுக்கான ஒரு முக்கிய முறையாகும். ஒரு நாடகத்தின் சிறப்பு என்பது அந்த நாடகம் ஏற்படுத்தும் ஷஷதொடர்பியல் வலு'' விலேயே தங்கியுள்ளது. அது மரபிலிருந்து பிறப்பது. புதிய மரபுகளை வளர்ப்பது.

நாடகம் பற்றிய இந்தக் கருத்துக்களை மனத்திருத்திக் கொண்டே வகுப்பினை நடத்தப்பெற வேண்டும். இந்தக் கற்கைநெறியால் நாம் செய்முறைக்கே முக்கியத்துவம் அளித்துள்ளோம். நாடகம் பற்றிய படிப்பு ஷஷசொல்லக் கேட்டல்'' அல்ல அது செய்து காட்டுதலைப் பிரதான தளமாகக் கொண்டது. அறிவியலில் போன்று இங்கும் செய்கை முறையே ஷஷகொள்கை'' (Theory) பற்றிய விளக்கத்துக்கான சிறந்த துணையாகும்.

ஆசிரியர் ஊக்கியாகவும், வழிகாட்டியாகவும், மதிப்பீட்டாளராகவும் தொழிற்பட வேண்டும்.

மாணவர் ஆர்வத்தையும், ஆற்றலையும் அறிந்து, பாடத்தின் இலக்கை மனதில் நிறுத்தி தொழிற்படும் போது எதை முதலில் செய்ய வேண்டும் எது, எதற்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பது பற்றித் தெளிவும் வரும்.

தேசிய கல்வி நிறுவகம்
அழகியற்துறை
(நாடகப்பிரிவு)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

## நாடகமும் அரங்கியலும் தேர்ச்சிகள் - தரம் 10

(1) நாடகமும் அரங்கியலும் தளமாக உள்ள கொள்கையைத் தெளிவுபடுத்தல்.

(2) சூழலுடன் இயைந்த அனுபவம், மூலப்பொருட்கள் ஆகியவற்றையும், சுய கற்பனையையும் இணைத்து படைப்பாக்கங்களை உருவாக்கி வெளிப்படுத்தல்.

(3) நாடகமும் அரங்கியலுக்கு அடிப்படையான கொள்கை பற்றிய அறிவை வளர்த்து, அதற்கேற்ப செயல்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

(4) இலங்கை நாட்டின் பண்பாட்டில் நாடகமும் அரங்கியலும் பெறும் இடம் பற்றிய வரலாற்றுப் பின்புலத்தை அறிதல்.

(5) நாடகமும் அரங்கியற்கலைகளும் எனும் விடயத்தை அழகியல் நிலைநின்று புரிந்து கொள்ளுதல்.

(6) மாணவர்களைச் சமூக மட்டத்தில் மாடனுடத்தன்மைமிக்க பண்பு கொண்டவர் களாக இருப்பதற்கு வேண்டிய ஊக்கப்பாட்டினை வழங்குதல்.

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

# தகமைத் தேர்ச்சி மட்டங்கள்

## நயத்தல்

1. நாடகம் அரங்கியலுடன் தொடர்பான அம்சங்களைத் தெளிவுபடுத்தல்
2. நாடகம் என்பது யாது என வரைவிலக்கணம் கூறுதல்
3. நாடக அரங்கக் கலையை மற்றைய கலைகளிலிருந்து வேறுபடுத்தி விளக்குதல்
4. நிருத்த, நிருத்திய, நாட்டிய என நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படுகின்ற வகைப்பாட்டை விளங்கிக்கொள்ளுதல்
5. மேடை நாடகத்தின் சிறப்புத் தன்மையைப் பற்றி அறிந்து கொள்ளுதல்
6. நாடகக் கதையொன்றினை அரங்க நிலைப்படுத்தும்போது நடைமுறைப் படுத்தப்படவேண்டிய விடயங்கள் பற்றி அறிதல்
7. உடல் வழிச்சித்திரிப்பு, குரல்வழிச்சித்திரிப்பு, காண்பியவழிச்சித்திரிப்பு, உணர்ச்சிவழிச் சித்திரிப்பு (ஆங்கிக, வாச்சிக, ஆஹார்ய, சாத்வீக) ஆகிய சித்திரிப்பு வகைகளை உதாரணங்கள் மூலம் விளங்கிக்கொள்ளல்
8. போலச் செய்தல் என்பதனை விளக்கமாக அறிந்து கொள்ளுதல்
9. லோகதர்மி, நாட்டியதர்மி எனப்படும் வகை வேறுபாடு பற்றி விளங்கிக் கொள்ளல்
10. பாத்திரங்களின் அக, புற நிலைகளைப் புரிந்துகொள்ளுதல்
11. நாடக மோதுகை என்பது யாது என்பதனை அறிந்து கொள்ளுதல்

## படைப்பாக்கச் செயற்பாடுகள்

1. இயல்பான அசைவுகளையும், ஆக்கியல் அசைவுகளையும் தாளத்தோடு சேர்ந்த அசைவுகளையும் செய்முறையாகக் காட்டுதல்
2. உடல் அசைவுகளையும், உள உணர்ச்சியையும் ஒன்றிணைக்கும் வகையில் தன்னிலை அசைவுகளைத் தாள ஒத்திசைவுகளுக்கேற்ற வகையில் வெளிப்படுத்தல்
3. உடனடித்தீர்மானம் எடுத்தல், உடனடியாகச் செய்தல் என்பவற்றை மனதில் கொண்டு அரங்கவிளையாட்டுக்களைச் செய்தல்
4. ஆத்திரம், நடவடிக்கைகள், சந்தர்ப்பங்கள் அல்லது ஏதாவது ஒரு பொருளை மையமாகக்கொண்டு தனித்தோ அல்லது குழுநிலையிலோ செய்து காட்டுதல்
5. ஆசிரியர் சொல்லும் ஒன்றினை உடனடியாகச் செய்து காட்டுதல்
6. கதையொன்றினைக் கேட்டு அந்தக் கதையினைக் கட்டம், கட்டமாகச் செய்து காட்டல்
7. கதையோட்டத்திற்கும், நாடகவோட்டத்திற்கும் இடையேயுள்ள வேறு பாட்டை அறிந்துகொள்ளல்
8. கதையொன்றினை எடுத்து தொடக்கம், நடு, முடிவு என்ற வகையில் வகைப்படுத்தி எழுத்துருவில் கொண்டுவந்து அதற்குப் பொருத்தமான ஆற்றுகை முறையைப் பயன்படுத்தி அந்த எழுத்துருவை நடித்துக்காட்டுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

## அறிகை முறைகள்

1. சுவாசித்தல், ஊடாடுதல், கேட்டல் ஆகியவற்றுக்காக மனதை ஒரு நிலைப்படுத்தல், உடலை வளைதல் போன்ற பயிற்சிகளை மேற் கொள்ளுதல்
2. விதிக்கப்பட்ட நாடக பாடங்களைப் படித்து ஆற்றுகை நிலையை அறிதல்
3. விதிக்கப்பட்ட நாடகங்களில் வரும் பாத்திரங்களைச் செய்து காட்டுதல்
4. பல்வேறு வகிபாகங்களுக்கு ஏற்ற வகையில் வேட உடை, ஒப்பனை, காட்சிப்பொருட்கள் ஆகியவற்றை மேற்கொள்ளல்

## பண்பாட்டுப் பின்னணி

1. மாணவர்கள் தமது நாடகப் பாரம்பரியத்தின் நாடக வரலாற்றை அறிந்து நாடகத்தின் தளமாக அமைகின்ற விடயங்களை அறிந்து கொண்டு அவை எடுத்துக்கூறும் முறைகளை விளங்கிக்கொள்ளல் (அவற்றின் ஆற்றுகை அம்சங்களை)
2. நேர்த்திக் கடனுக்காகச் செய்யப்படும் நாடகப் பாங்குடைய சடங்குகளை அறிந்து கொள்ளுதல் (காத்தவராயன் கூத்து)
3. குழு நிலைப்பட்ட ரசனை, கருத்துக்களை வெளிப்படுத்துதல், மற்றவர் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியவை சம்பந்தமாக விதிக்கப்பட்ட நாடகப் பாடங்களிலிருந்து நடித்துக்காட்டுதல்
4. கதைப்பின்னல், அரங்கவிதானம் ஆகியவற்றின் சிறப்பம்சங்களை அறிதல்
5. நாடக மோடிகள், பாத்திரச் சித்திரிப்பு (நால்வகை அபிநயங்களைப் பயன்படுத்தி) ஆற்றுகையை நிகழ்த்துதல்
6. அரங்க கட்டிடங்களை அமைத்தல்
7. நாடகம் வெற்றிபெறுவதற்கான பிற அம்சங்கள் பற்றி அறிதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

## தரம் 10 முதல் 11 வரைக்கான தகமைத் தேர்ச்சிகள்

(1) நாடகச் சம்பவங்களை அழகியல் நிலையில் ரசிக்கும், மனித நிலையில் புரிந்து கொள்ளும் திறனை வெளிக்காட்டுதல்

(2) சூழல் சார்ந்த விடயங்களையும், பொருட்களையும் கற்பனை வளத்துடன் இணைக்கும் திறனை வெளிக்காட்டுதல்

(3) நாடகம் - அரங்கின் தளமாக அமையும் கொள்கைசார் விடயங்களைக் கற்றறிந்து கொள்ளுதல்

(4) கொள்கை நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபாடுடையோராகுதல்

(5) நாடகவாக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கான பண்பாட்டு மரபுவழிப் பெறுபேறுகளைக் கண்டுகொள்ளுதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

# பாடப்பரப்பு (Scope)

**01. நயத்தல்**

நயத்தலுக்கான ஆற்றல்
வியத்தல்
இணைப்புத்திறன்
இயைபு
கலை
நிஜநிலை
கலைப்பெறுமானம்
வேறுபடுகைகள்/கவர்ச்சி
சமூகப் பெறுமானம்

**02. படைப்பாக்கச் செயற்பாடுகள்**

படைப்பாக்கம்
நாடக உத்தி நுட்பங்கள்
இணைவுத்திறன்
மாதிரியங்கள்
திட்டமிடல்
கோலங்கள்
அசைவு
போலச் செய்தல்
கதைப்பின்னல்

**03. கொள்கைகள்**

விடயப்பொருள்
ஒத்திசைவு
நாடக பாடம்
நாடகமொழி
நாடக எழுத்துரு
மேடை
நாடக இசை
நாடக உத்திநுட்பங்கள்

**04. நடைமுறைச் செயற்பாடுகள்**

ஒத்திசைவு
நாடகமொழி
நாடக வியப்பு
பார்ப்போர்
ஆற்றுகை

**05. பண்பாட்டுப்பின்புலம்**

பண்பாட்டுப் பெறுமானம்
நடத்தைப் பெறுமானங்கள்
பண்பாட்டுப் பேறு
சமூக தொலைநோக்கு
நாடக நோக்கு

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

# தரம் 10 - பாடப்பரப்பு (Scope)

**01. நயத்தல்**

ஒரு குறிப்பிட்ட நாடக பாடத்தின் வெற்றி, தோல்வி பற்றிய கருத்துத் தெரிவித்தல்

**02. படைப்பாக்கச் செயற்பாடுகள்**

நாடகத்திற்கான அசைவியக்கம், நாடக மொழியாக்கம், நாடகத்திற்கான உத்தி நுட்பங்களைத் தயாரித்தல் ஆகிய மூன்று துறைகளிலும் படைப்பாக்கத் திறனை வெளிப்படுத்தல்

**03. கொள்கைகள்**

அடிப்படையான நாடகக் கொள்கைகளை விளக்குதல்

**04. நடைமுறைச் செயற்பாடுகள்**

நாடகம் தொடர்பான சில அடிப்படைப் பயிற்சிகளையும், செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல்

**05. பண்பாட்டுப்பின்புலம்**

உள்ளூர் நாடக மரபுகளின் தோற்றம், வளர்ச்சியை அறிதல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

## தகவுத் தேர்ச்சி மட்டங்கள் - தரம் 10

(1) விதிக்கப்பட்ட நாடக பாடங்களைக் குழுநிலையில் நயத்தலில் தமது கருத்தை சொல்வதும், பிறர் கருத்தை ஏற்பதும் ஒரு முக்கிய அம்சமாகும்.

(2) கீழே தரப்படும் விடயங்கள் பற்றிய படைப்பாக்க உணர்வை வெளிப்படுத்துக.
1. மொழிநிலைப் படைப்பாக்கம்
2. நாடக ஆற்றுகைக்கான செயல் முனைப்பு
3. அசைவுகள்வழிபடைப்பாக்கம்

(3) நாடகம் அரங்கியல் பற்றிய அடிப்படைக் கற்கைக்கான கொள்கைகளை அறிந்து கொள்ளுதல்

(4) நாடக அரங்கியல் அடிப்படைக் கொள்நெறிக்கு வேண்டிய செய்முறைகள்

(5) நாடகமும் அரங்கியற்கலைகளும் எனும் விடயத்தை அழகியல் நிலைநின்று புரிந்து கொள்ளுதல்

(6) உள்ளூர் நாடக வரலாற்றை அறிதற்கான முயற்சிகள் தொடங்கல்

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

## பாடத்திட்டம் - தரம் 10

1 நயத்தல்
- 1.1 நாடக பாடம் - விழிப்பு
  பாத்திரம், சொல்லாடல், கதைப்பின்னல், நாடக நெறியாளுகை
- 1.2 அரங்கு
  - 1.2.1 நாடக பாணிகள் நாட்டிய சாஸ்திரத்தில் கூறப்படும் நான்கு வகை அபிநயங்களின் பயன்பாடு
  - 1.2.2 அரங்கக் கைவினைகளின் பயன்பாடு
    (நாடகத்திற்கான இசை, ஒளி, ஆடை அமைப்பு,மேடைப்பொருட்கள், ஒப்பனை, ஆட்ட அசைவு அமைதி, மேடைக்காட்சி அமைப்புக்கள்)
  - 1.2.3 நாடக ஆக்கத்தில் வெற்றியீட்டுகை

2. படைப்பாக்கச் செயற்பாடுகள்
- 2.1 உடலசைவுகள் சார்ந்த செயற்பாடுகள் (உடல், மன, ஒருமிப்புக்கு உதவும் இயல்பான அசைவுகள்)
- 2.2 முன் ஆயத்தமில்லாத உடனடி வெளிப்படுத்துகை
- 2.3 நடிப்பு முதல் நெறியாள்கை வரை
- 2.4 எந்த ஒரு வேளையிலும் கிடைக்கும் பொருட்களுடன் முன் ஆயத்தமில்லாது உடனடியாக நடித்தல்

3. கொள்கைகள்
- 3.1 நாடகம் என்பது யாது?
  - 3.1.1 நான்கு வகை அபிநயங்கள்
  - 3.1.2 நடிப்பு
  - 3.1.3 நாடக மோதுகை
  - 3.1.4 உலகியல் வழக்கு, நாடக வழக்கு பற்றிய விளக்கம்

4. செயல்முறைகள்
- 4.1 நாடகப்படைப்பாக்கம்
- 4.2 நாடக பாடத்தை வாசித்தல்
- 4.3 சொல்லாடலின் பயன்பாடு
- 4.4 பாத்திர உருவாக்கம்
- 4.5 நாடக நிகழ்ச்சியின் உருவாக்கம் முதல் சொல்லாடல் வரை
- 4.6 மேடை உபகரணங்களையும், வேடப்புனைவையும் திட்டமிடலும், செய்தலும்

5. பண்பாட்டுப் பின்புலம்
- 5.1 சுதேச மரபுவழி நாடகப் பாரம்பரியங்களின் ஆற்றுகைப் பண்புகள்
- 5.2 சடங்குகள்
  - 5.2.1 வேட்டைத்திருவிழா
  - 5.2.2 சூரன் போர்
  - 5.2.3 குளிர்த்தி (அம்மன்)
  - 5.2.4 பாண்டவர் வனவாசம்
  - 5.2.5 காமன் கூத்து
  - 5.2.6 பாஸ்கா

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved

# பாடத்திட்டம் - தரம் 11

1 நயத்தல்
   1.1 நாடக பாடம் - எந்தையும் தாயும்
   - மழை
   பாத்திரம், சொல்லாடல், சூழமைவு, நாடக நெறியாளுகை, நாடக அனுபவங்கள்

   1.2 அரங்கு
      1.2.1 நாடக பாணிகள்
      1.2.2 அரங்கக் கைவினைகளின் பயன்பாடு
      (நாடகத்திற்கான இசை, ஒளி, மேடைப்பொருட்கள், ஒப்பனை, ஆட்ட அசைவு அமைதி, மேடைக்காட்சி அமைப்புக்கள்)
      1.2.3 பார்ப்போம் பதிற்குறிகள்
      1.2.4 முழு நாடக அளிக்கையையும் நயத்தல்
      1.2.5 மரபுவழி நாடகம்
      (தொலைக்காட்சி நாடகம், வானொலி நாடகம், பாடசாலை நாடகம், சிறுவர் நாடகம்)

2. படைப்பாக்கச் செயற்பாடுகள்
   2.1 முன் ஆயத்தமில்லாத உடனடியாக நாட்டார் கதைகளையும் வரலாற்றுக் கதைகளையும் நடித்துக் காட்டுதல்
   2.2 உளமம்
   ஆள்நிலை அனுபவங்களின் அடிப்படையில் ஊமம் செய்தல். சொல்லப்படுகின்ற வற்றிற்கு ஏற்ப ஊமம் செய்தல்
   2.3 பாத்திரச் சித்திரிப்பு (நடிப்பு)
   நாட்டார் கதைகளை அடிப்படையாகக் கொண்டும் மரபுவழிக் கதைகளை வியாக்கியானம் செய்யும் முறைமையிலும்
   நாடகங்களை உருவாக்குதல்
   2.4 நாடகப் படைப்பாக்கம்
   புத்தாக்க நாடகம்

3. கொள்கைகள்
   3.1 மேடை - வெவ்வேறு வகையான மேடைகள்
      3.1.1 ஆடை அணிகள்
      3.1.2 வேடப்புனைவு
      3.1.3 நாடகத்திற்கான அலங்காரம்
      3.1.4 மேடைக்கான ஒளி அமைப்பு
      3.1.5 நாடகத்திற்கான இசையும் ஆட்ட ஆக்கமும்
      3.1.6 ஆற்றுகைக் கலை வடிவங்களிடையே நாடகம்
      3.1.7 நாடகத்தைப் பார்ப்போரது இடத்து ஏற்படும் பிறர் நிலை உணர்கை

4. செயல் முறைகள்
   4.1 நாடகப்பயிற்சிகள்
   4.2 எழுத்துரு வாசிப்பு
   4.3 சொல்லாடலின் பயன்பாடு
   4.4 பாத்திர உருவாக்கம்
   4.5 நாடக நிகழ்ச்சியின் உருவாக்கம் முதல் சொல்லாடல் வரை
   4.6 மேடை உபகரணங்களையும், ஆடை அணிகளையும், மேடை அமைப்புக்களை யும் திட்டமிடலும் செய்தலும்

5. பண்பாட்டுப் பின்புலம்
   5.1 ஷேஸ்பெசல்" நாடகங்கள்
   5.2 நவீன நாடகவாக்கம்
   5.3 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை
   கலையரசு மற்றும் நாடக ஆர்வலர் நாடக முயற்சிகள்
   (பிரதேச வாரியாகப் பார்க்கவும்)

Copyright © 2006 National Institute of Education - Sri Lanka. All rights reserved